National
Redress Scheme
For people who have experienced
institutional child sexual abuse

# தகவல் ஏடு

# குறைதீர்ப்பிற்காக விண்ணப்பித்தல்

'தேசிய குறைதீர்ப்புத் திட்டம்' குழந்தைப் பருவத்தில் இருந்தபோது (18 வயதுக்குக் கீழ்) நிருவன ரீதியான பாலியல் துஷ்பிரயோகத்தை அனுபவித்தவர்களுக்கானதாகும்.

'குறைதீர்ப்' பிற்காக விண்ணப்பிக்கும் செயல்முறையைப் பற்றிய கண்ணோட்டம் ஒன்றை இந்தத் தகவலேடு அளிக்கிறது.

## நீங்கள் எப்போது விண்ணப்பிக்கலாம்?

'தேசிய குறைதீர்ப்புத் திட்டம்' என்பது 2018 ஜூலை 1 அன்று தொடங்கப்பட்டு 10 ஆண்டுகளுக்கு இயங்கும். தற்போது முதல் 2027 ஜூன் 30 வரை எந்த நேரத்திலும் நீங்கள் விண்ணப்பிக்கலாம்.

படிவத்தை நிரப்ப உங்களுடைய நம்பிக்கைக்கு உரிய ஒருவரிடமிருந்து நீங்கள் ஆதரவுதவி பெறலாம், அல்லது இலவச ஆதரவுதவி சேவை (குறைதீர்ப்பு ஆதரவுதவிச் சேவைகள்) ஒன்றின் மூலமாக நீங்கள் உதவி பெறலாம்.

## உதவி பெறல்

விண்ணப்ப செயல்முறைக்கு முன்னரும், விண்ணப்பிக்கும் போதும், அதன் பின்பும் உங்களுக்கு ஆதரவுதவி வழங்கி உதவுவதற்கு இலவச, சுதந்திர மற்றும் இரகசிய ஆதரவுச் சேவைகள் கிடைக்கின்றன. ஒரு ஆதரவுதவிச் சேவையைக் கண்டறிய, TIS-ஐ **131 450** என்ற இலக்கத்தில் அழைத்து, 'தேசிய குறைதீர்ப்புத் திட்ட' த்தை **1800 737 377** என்ற இலக்கத்தில் அழைக்குமாறு அவர்களைக் கேட்கவும்.

உங்கள் சார்பாக வேறு எவரும் 'தேசிய குறைதீர்ப்புத் திட்ட' த்துடன் பேசவோ அல்லது தொடர்பு கொள்ளவோ வேண்டிய தேவை உங்களுக்கு ஏற்பட்டால், அவர்கள் ஒரு 'குறைதீர்ப்பு நியமனதாரர் படிவத்தை' நிரப்ப வேண்டும்.

## நீங்கள் எப்படி விண்ணப்பிப்பது?

நீங்கள் ஒரு காகிதப் படிவம் மூலமோ, இணையதலத்திலோ விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யலாம்.

விண்ணப்பக் காகிதப் படிவம் ஒன்றைப் பெறுவதற்கு நீங்கள்:

- www.nationalredress.gov.au -இலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்

- 1800 737 377 என்ற இலக்கத்தினை அழைத்து விண்ணப்பப் படிவம் ஒன்றை அனுப்பும்படி உங்களுக்கு கோரலாம்
- ஆதரவுதவிச் சேவையிடமிருந்து ஒன்றைக் கேட்டுப் பெறலாம்.

காகித விண்ணப்பப் படிவம் ஒன்றை நீங்கள் பயன்படுத்துவதாயின், பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தை அனுப்ப வேண்டிய முகவரி:

National Redress Scheme
Reply Paid 7750
Canberra BC ACT 2610
Australia

நீங்கள் தபால் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை.

myGov மூலம் இணைய வழியாக நீங்கள் விண்ணப்பிக்கலாம். உங்களிடம் ஏற்கனவே myGov கணக்கு இல்லையென்றால் www.my.gov.au இற்குச் சென்று கணக்கு ஒன்றை உருவாக்கிக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை எங்களுக்கு மீள அனுப்புவதற்கு முன் அதன் ஒரு பிரதியை உங்களிடம் வைத்துக் கொள்ளவும்.

உங்கள் விண்ணப்பத்தில், உங்களுக்கு என்ன நடந்தது என்பதையும் அது உங்கள் வாழ்க்கையில் ஏற்படுத்திய தாக்கம் பற்றியும் நீங்கள் எழுத வேண்டும்.

நீங்கள் விரும்பும் விரைவில் ‘தேசிய குறைதீர்ப்புத் திட்ட’ த்திற்கு நீங்கள் விண்ணப்பிக்கலாம், மற்றும் நீங்கள் நேரடியாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டியதில்லை.

உங்கள் விண்ணப்பம் மற்றும் முடிவு பற்றிய அனைத்துத் தகவல்களும் பாதுகாக்கப்படும். இது ‘தேசிய குறைதீர்ப்புத் திட்ட’ த்தின் நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படும், மற்றும் இதில் தொடர்புடைய நிறுவனங்களுடன் சில தகவல்களைப் பகிர்வதும் அடங்கலாம்.

## உங்கள் விண்ணப்பத்தை செயலாக்கம் செய்தல்

‘தேசிய குறைதீர்ப்புத் திட்ட’ க் குழு உங்கள் விண்ணபத்தைப் பெற்றதும் அது கிடைக்கப் பெற்றதை தெரிவிப்பதற்காக அவர்கள் உங்களை தொலைபேசி மூலம் அழைப்பார்கள். உங்களிடமிருந்து கூடுதல் தகவல் தேவைப்பட்டால் அது பற்றி அவ்வேளை அவர்கள் உங்களிடம் கேட்கலாம்.

‘தேசிய குறைதீர்ப்புத் திட்டம்’ ஆஸ்திரேலிய அரசாங்கத்தால் நடத்தப்படுகிறது, ஆயினும் ‘சுயாதீன முடிவெடுப்பாளர்' ஒருவர் விண்ணப்பங்களைப் பரிசீலித்து, விளைவுகளை முடிவு செய்வதோடு மதிப்பாய்வுகளையும் நடத்துவார்.

‘சுயாதீன முடிவெடுப்பாளர்கள்’ சமூக நலன், வழக்கு மேலாண்மை மற்றும் சட்டம் உட்பட பல்வேறுபட்ட பின்னணியில் இருந்து வரும் மிகவும் அனுபவம் வாய்ந்த, மதிப்பிற்குரிய நபர்களாவர்.

அவர்கள் அரசு ஊழியர்களோ அல்லது ‘தேசிய குறைதீர்ப்புத் திட்ட’ த்தில் பங்கேற்கும் எந்த நிறுவனங்களுடனும் தொடர்புடையவர்களோ அல்லர்.

‘சுயாதீன முடிவெடுப்பாளர்’ உங்கள் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள அனைத்துத் தகவல்களையும் மற்றும் நிறுவனம்/நிறுவனங்கள் அளித்த தகவல்களையும் பரிசீலிப்பார்.

குறித்த நிகழ்வுகள் நடந்திருக்க வாய்ப்புள்ளது என்று அவர் தீர்மானித்தால், குறைதீர்ப்பு வழங்கீடு ஒன்று மேற்கொள்ளப்படும்.

## குறைதீர்ப்பு வழங்கீடு

உங்கள் விண்ணப்பம் செயலாக்கப்பட்டதும், முடிவை விளக்கும் ஒரு கடிதத்தை நீங்கள் பெறுவீர்கள். கிடைக்கும் பலாபலனில் நீங்கள் திருப்தி அடையவில்லை என்றால், நீங்கள் ஒரு மதிப்பாய்வு செய்யுமாறு கேட்கலாம்.

உங்கள் விண்ணப்பம் வெற்றிகரமானதாக இருந்தால், உங்களுக்குக் கிடைக்கும் அறிவுரையாலோசனை மற்றும் உளவியல் சேவைகளைப் பற்றி அக்கடிதம் உங்களுக்குத் தெரிவிக்கும். விடயத்திற்குப் பொறுப்புடைய நிறுவனத்திடமிருந்து ஒப்புகையைப் (மன்னிப்பு போன்ற ஒரு நேரடியான தனிப்பட்ட பதில்) பெறுவதற்கான விருப்பத்தெரிவினைக் கடிதம் உங்களுக்கு வழங்குவதோடு உங்களுக்கு வழங்கப்படும் செலுத்துத் தொகையையும் விளக்கிக் காண்பிக்கும்.

உங்கள் குறைதீர்ப்புப் பணத் தொகையை மொத்தமாகவோ அல்லது தவணையாகவோ பெற நீங்கள் தெரிவு செய்யலாம். பெறுகின்ற பணக் கொடுப்பனவு, Centrelink உட்பட உங்கள் நிதி நிலைமையை பாதிக்கக்கூடும் என்பதைத் தயவுசெய்து கவனிக்கவும்.

வழங்கீட்டைப் பரிசீலிக்கவும், அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதில் உங்களுக்கு உதவுவதற்கும், கிடைக்கின்ற ஆதரவுதவிச் சேவைகள் பற்றிய தகவலை அந்தக் கடிதம் வழங்கும், உங்களுடைய உணர்வுகள் எப்படி உள்ளன என்பதைப் பற்றிப் பேசுவதற்கும் ‘ஆதரவுதவி சேவை’களால் ஒருவரை ஏற்பாடு செய்ய முடியும்.

## குறைதீர்ப்பு வழங்கீட்டை எப்படி ஏற்பது அல்லது நிராகரிப்பது

‘தேசிய குறைதீர்ப்புத் திட்ட’ வழங்கீட்டை ஏற்க, நீங்கள் ஆறு மாதங்களுக்குள் ஒப்புதல் ஆவணத்தில் கையொப்பமிட்டு அதைத் திருப்பி அனுப்ப வேண்டும். ஆறு மாதங்களுக்குள் நீங்கள் வழங்கீட்டை ஏற்கவில்லை என்றால், வழங்கீடு நிராகரிக்கப்பட்டதாகக் ‘தேசிய குறைதீர்ப்புத் திட்டம்’ எடுத்துக்கொள்ளும். வழங்கீட்டை ஏற்க இன்னும் 30 நாட்கள் இருக்கும்போது ஒரு நினைவூட்டல் அனுப்பப்படும். உங்களுக்கு அதிக நேரம் தேவைப்பட்டால், இக்கால வரம்பை நீட்டிக்குமாறு நீங்கள் கோரலாம்.

வழங்கீட்டை ஏற்க நீங்கள் முடிவு செய்தால்:

- குறிப்பிட்ட அந்தத் துஷ்பிரயோகத்திற்கு பொறுப்பான நிறுவனம் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு எதிராக மேலதிக சிவில் சட்ட நடவடிக்கை எடுக்க உங்களால் முடியாது (இருப்பினும், பெயர் சொல்லப்பட்ட துஷ்பிரயோகியை அல்ல)
- அந்த துஷ்பிரயோகத்திற்காக எதிர்காலத்தில் அந்த நிறுவனத்திடமிருந்து வேறு எந்த வகையான இழப்பீட்டையும் பெறுவதற்கான உரிமம் உங்களுக்கு இருக்காது.

ஒப்புதல் ஆவணத்தில் கையொப்பமிடுவதற்கு முன், ‘தேசிய குறைதீர்ப்புத் திட்ட’த்தின் இலவச மற்றும் இரகசிய சட்ட ஆலோசனையை நீங்கள் அணுக வேண்டுமெனப் பரிந்துரைக்கப்படுகிறது.

வழங்கீட்டை நிராகரிப்பதாயின், நீங்கள் வழங்கீட்டை நிராகரிப்பதாகக் கூறும் ஆவணத்தில் கையொப்பமிட்டு அதைத் திருப்பி அனுப்ப வேண்டும். வழங்கீடு நிராகரிக்கப்பட்டால், குறிப்பிட்ட அந்தத் துஷ்பிரயோகம் தொடர்பாக ‘தேசிய குறைதீர்ப்புத் திட்ட’த்தின் கீழ் நீங்கள் மேற்கொண்டு எந்த விண்ணப்பத்தையும் சமர்ப்பிக்க முடியாது. ஆனால் ஒரு நிறுவனம் தொடர்பாக குற்றவியல் நடவடிக்கையை (காவல்துறைக்குச் செல்லலாம்) நீங்கள் மேற்கொள்ளலாம்.

## மேலதிகத் தகவல்களுக்கு

'தேசிய குறைதீர்ப்புத் திட்டம்' பற்றி மேலும் தெரிந்துகொள்ள, **www.nationalredress.gov.au** - இற்குச் செல்லவும், அல்லது 'குறைதீர்ப்பு ஆதரவுதவிச் சேவை' களுடன் தொடர்பு கொள்ள. **1800 737 377** என்ற இலக்கத்தை அழைக்கவும்.

உங்களுக்கு ஒரு உரைபெயர்ப்பாளர் தேவையாயின், 131 450 என்ற எண்ணில் **TIS 'நேஷனல்'**-ஐ அழைத்து, 'தேசிய குறைதீர்ப்புத் திட்ட' த்தை 1800 737 377 என்ற இலக்கத்தில் அழைக்குமாறு அவர்களிடம் கேளுங்கள்.